மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டத்தில் கலந்து கொள்ளாத ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்குவதோடு மட்டுமல்லாமல், யார் யார் எந்த வழித்தடங்களில் செல்கிறார்களோ டிரைவர்களாக இருந்தாலும், நடத்துனர்களாக இருந்தாலும், அவர்கள் கலெக்ஷனையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இப்போது புதிய முறையைக் கையாள இருக்கிறோம். சில வழித்தடங்களில் செல்கிறபோது தனியார் வண்டிகள் முந்திச் செல்கிறபோது அவர்கள் பின்னால் செல்கிற சூழ்நிலை ஓரிரு இடங்களில் நிலவி வருகிறது என்பதைக் கருத்திற்கொண்டு, அதிகமான இலாபம் ஈட்டுகிற அந்த வழித்தடங்களில் யார் யார் சிறப்பான முறையில் பணியாற்றுகிறார்களோ, அந்த வழித்தடங்களில் அவர்களுக்குத் தொடர்ந்து பணிகளை வழங்குவதும், இல்லையென்றால் உடனடியாக மாற்றுவதற்கும் நாம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம். அந்த நடவடிக்கையின் காரணமாக இதுவும் பரிசிலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் விடுப்பு எடுக்காமல், வீவே எடுக்காமல் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்களுக்கு அரசு ஏதாவது பரிசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்று இதுவரையில் இல்லை. உங்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளும்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் : தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொரு கேள்வியிலும் உங்களுக்கு துணைக் கேள்வி அனுமதிக்க முடியாது. ஒரு நாளைக்கு ஒரு துணைக் கேள்விதான். வினா எண் 526, திரு. உ. பலராமன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

526—

பெரம்பூர் ஓட்டேரி நல்லாவினை ஆழப்படுத்துதல்.

*14258—திரு. உ. பலராமன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பூர் தொகுதியில் உள்ள ஓட்டேரி நல்லாவினை ஆழப் படுத்தாதனால் சூளையில் மழைக்காலங்களில்படகு விட வேண்டிய நிலை இருப்பதால், அதனை ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

1994 மே 5]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை நகரில், பெரம்பூர் தொகுதியின் வழியே ஓடும் ஓட்டேரி நல்லாவினை மேம்படுத்தும் பணிக்கென ரூ. 210 லட்சத்தில் ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பொதுப்பணித் துறையின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. உ. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூளை, தட்டான்குளம் கான்ஸ் ரோடு பார்டிஷனில் மற்றும் அதைச் சார்ந்த எண்ணூர் பகுதி வரையில் மழைக் காலங்களில் ஐந்து அடி, ஆறு அடி தண்ணீர் நிற்கிற நிலைமை இருக்கிறது. 1991-லே படகுகள் விடுவதற்கு உண்டான ஏற்பாடு களைக்கூட மாநகராட்சி செய்து வந்திருந்தது. 3 ஆண்டுகளாக தொடர்ந்து இந்தக் கால்வாய் ஏற்கெனவே தூர்ந்து போய் இருந்த காரணத்தால் தூர் வாரவேண்டும் என்று நான் கேட்டு இருந்தேன். அந்த வகையிலே இப்போது அதற்காகப் பணம் ஒதுக்கப்பட்டு இருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. வருகிற மழைக் காலங்களுக்கு முன்னால் இந்தப் பணியை அரசு செய்து முடிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஓட்டேரி நல்லாவினை சீர்செய்வதற்கும் அந்தப் பகுதியிலே எல்.எஸ். 9,400 மீட்டர் முதல் இறுதி வரையில் அதாவது கான்ஸ் ரோடு பாலத்தின் அருகிலேயிருந்து ஓட்டேரி நல்லா பக்கிங்காம் கால்வாயில் சேரும் வரையில் உள்ள 1.4.4. கிலோ மீட்டர் நீளத்திற்கு சுமார் 1:2 மீட்டர் ஆழப்படுத்துவதற்கான மதிப்பீடு 9.6 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு கோட்ட அலுவலகத்தினுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இது சம்பந்தமாக நிதி வசதிக்கேற்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. பலராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற மழைக்காலத்திற்கு முன்னால் அந்தப் பணி செய்து முடிக்கப்படுமா என்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற நிதி ஆதாரத்தைப் பொறுத்து, அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 527, திரு. ஆர். முருகையா பாண்டியன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

527—

அம்பாசமுத்திரம் பகுதியில் தென்காசி செல்லும் சாலையை இணைக்க புறவழிச்சாலை அமைத்தல்.

*14408—திரு. ஆர். முருகையா பாண்டியன் :
மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் பேரூராட்சிமன்றப் பகுதியில் தென்காசி செல்லும் சாலையை இணைக்கும் வகையில் புறவழிச்சாலை (பைபாஸ் ரோடு) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். முருகையா பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலை, அம்பாசமுத்திரம் நகரத்திற்கு மிகவும் அவசியமானது, மாற்றுச் சாலை அமைக்க வேண்டியது அவசியம் என்று கருதுகிறோம். அம்பாசமுத்திரம் டவுனுக்குள் வரும்போது, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான ரோடு இருக்கிறது. அது குறுகிய ரோடு. அதிலே தென்காசிக்கும், திருநெல்வேலிக்கும் செல்ல வேண்டிய லாரிகள், வாகனங்கள் அனைத்துமே, நகரத்திற்குள் வரும்போது—எதிர் எதிராக வரும்போது, இட வசதி இல்லாத காரணத்தால், பல மணி நேரம் காலதாமதம் ஆகிறது. எனவே, இந்தச் சாலையை வேறு ஒரு பக்கமாக, அதாவது கல்லிடைக்குறிச்சியிலிருந்து, தாமிரபரணி ஆற்றுப்பாலத்திலிருந்து, எரிசலாறு கோயில் வழியாக, மேலப் பாளம் தெரு, பொதுப்பணித்துறை கால்வாய் வழியாக, ரயில்வே ஸ்டேஷனையொட்டி, தென்காசி சாலை வருகிறது. அங்கே கொண்டுபோய் இணைத்தால் இந்தப் போக்குவரத்தை ஓரளவிற்குக் குறைக்கலாம் என நாங்கள் கருதுகிறோம். அப்படி இல்லை என்றாலும்கூட, அம்பாசமுத்திரம் பஞ்சாயத்து யூனியன் அருகில் இருந்து ஒரு ரோடு, அதாவது காட்டுச்சாலையில் இதற்கு முன்பாக அமைக்கப்பட்ட ஒரு சாதாரண மண் ரோடு இருக்கிறது.